மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகளில் அப்படி இருக்கிறது. ‘ அலவ் ’ செய்திருந்தாலும் அமைச்சர்கள் எந்த நேரத்திலும் விடையளிக்க மறுக்கலாம் என்று இருக்கிறது. எனவே, இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எதுவுமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : துணைக் கேள்விகளையாவது அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விக்கு விவரங்களைச் சொல்லாமல் இருப்பது நல்லது என்ற கருத்தைச் சொல்லிவிட்டபிறகு அதன் மேல் துணைக்கேள்விகளைப் போட்டால் அதே விடையைத்தான் சொல்ல வேண்டி வரும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நான் மானியக் கோரிக்கையின்பொழுது விடையளித்தபொழுதே சொல்லியிருக்கிறேன். எனவே, முழு விவரத்தையும் கூறுவது நல்லது அல்ல என்றுதான் சொல்கிறேன்.

நெல்லித்துறை மின் நிலையத் திட்டம்.

*760. வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லித்துறை மின் நிலையத் திட்டப்பணிகளை விரைவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சி.டபிள்யூ பிசி யின் அனுமதியைப் பெற்று, இப்பொழுது நெல்லித்துறை திட்டம் திட்ட ஆணைக் குழுவின் அனுமதிக்காகச் சென்றிருக்கிறது. வந்தவுடன் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, நெல்லித்துறை நீர் மின்சக்தித் திட்டத்திற்கு மொத்தம் எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டில் இந்தத் திட்டம் முடிவுறும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இதனுடைய முழுச் செலவின் அளவு 8 கோடியே 54 இலட்சம் ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மத்திய சர்க்காரின் சி.டபிள்யூ. பி.சி.யினால் அங்கீகரிக்கப்பட்டு கடைசியாகத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெறுவதற்காகச் சென்றிருக்கிறது. ஒப்புதல் வந்தவுடன் வேலையை ஆரம்பிக்கலாம்.

1974 ஏப்ரல் 4]

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருந்த ரிசோர்சஸ் எல்லாம் எக்சாசஸ்ட் செய்யப்பட்டுவிட்டதா? இன்னும் பாக்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது பொதுவானதொரு கேள்வியாக இருப்பதால் தனியாகக் கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் தரலாம்.

Electricity Bills

* 761 *Q*.—THIRU K. KANDASAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that bills claiming charges for electricity supplied to the Consumers in the State have not been despatched for the past 6 months; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) சென்னை மின் திட்டத்தில் 1-10-1973 அன்று வெளியிடப்படாமல் இருந்த மின் கட்டண பில்களின் மொத்த எண்ணிக்கை 2,49,000. இன்றைய தேதியில் எல்லா பில்களும் வெளியிடப் பட்டுவிட்டன.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மின் கட்டணத்தை அவ்வப்பொழுது வசூலித்துவிட்டால் அதைக் கட்ட வேண்டியவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஒன்றாகச் சேர்த்துப் பல நேரங்களில் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டால் மின் சக்தியை உபயோகிப்பவர்களுக்கும் பெருந் தொல்லைகள் ஏற்படும். இப்பொழுது எல்லா பில்களும் வெளியிடப்பட்டு விட்டன என்று கூறினார்கள். எனவே, வருங்காலத்தில் இம்மாதிரி ஏற்படாமல் இருக்க அவ்வப்பொழுது அந்த பில்களைக் கட்டும்படியான சூழ்நிலையை உருவாக்கும் வகையில் அங்குள்ள பணியாளர்கள் பணியைச் செய்வதற்கு அரசு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தொழிலாளர் பிரச்னைகளின் மூலம் இந்தச் சிக்கல் எழுந்தது. அது முடிக்கப்பட்ட பிறகு இந்தக் கோரிக்கை இப்பொழுது முடிக்கப்பட்டுவிட்டது—பிறகு இதுபோன்று நடப்பதுதான் நல்லது என்று கருதி அதன்படிதான் ஆலோசனை கூறப் பட்டிருக்கிறது.